O.S.No. 178/2016
13.02.2020.

பி.வா.சா.2.திரு.அய்யாவு, த.பெ.அழகப்பன்

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

என் தகப்பனார் பெயரில் உள்ள பட்டா எண் 318, அவர் இறந்த பிறகு என் பெயரிலும், வாதி பெயரிலும் கூட்டுப்பட்டாவாக மாறியது என்றால் சரிதான். 1983ம் வருடத்தில் பி.வா.சா.ஆ-4 ஆவணத்தில் கண்ட சொத்துக்களை நான் உழவடை செய்து வந்தேன் என்றால், நான்தான் உழவடைக்கு வாங்கி உழவடை செய்து வந்தேன், என் அப்பா உழவடை செய்யவில்லை. எவ்வளவு தொகைக்கு உழவடை வாங்கினேன் என்றால் ரூபாய் 25000/-. நான் தனிகுடித்தனம் சென்ற பிறகு என்ன வேலை செய்தேன் என்றால் விவசாய வேலை தான் செய்து வந்தேன். நான் தனிகுடித்தனம் சென்ற போது என் அப்பா சொத்து எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல, என் அப்பா சொத்து கொடுத்தார். குறிப்பாக எந்த சொத்து கொடுத்தார் என்றால் குறிப்பாக எந்த சொத்து என்று என்னால் கூற இயலவில்லை, ஆனால் சுமாராக இரண்டு ஏக்கர் சொத்து கொடுத்தார். என் தந்தை எனக்கு இரண்டு ஏக்கர் சொத்து கொடுத்ததாக எனது எதிர் வழக்குரையிலோ, எனது பிராமண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தை நான் கடினமாக உழைத்து தான் வாங்கியுள்ளேன் என்று எனது நிருபண வாக்குமூலத்தில் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். நான் தனியாக சென்ற உடன் அடுத்த வருடத்திலேயே தாவா சொத்தை வாங்கியதற்கான வருமானம் குறித்த ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் என் மனைவியின் நகையை அடகுவைத்து வாங்கினேன். இந்த விவரத்தை எனது எதிர் வழக்குரையிலோ, நிருபண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தை என் அப்பாதான் என் பெயரில் உழவடை எடுத்து செய்து வந்தார் என்றால் சரியல்ல. பட்டா எண் 318ல் கண்ட சொத்துக்களில் உள்ள வருமானத்தை வைத்துதான் தாவா சொத்து வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. என் அப்பா தனது காலத்தில் என் பெயரிலும், என் தம்பி பெயரில் மற்றும் 2ம் பிரதிவாதி பெயரிலும் சொத்துக்கள் வாங்கினார் என்றால், என் பெயரிலும் என் தம்பி பெயரிலும் வாங்கினார், 2ம் பிரதிவாதி பெயரில் வாங்கவில்லை. 1980ம் ஆண்டு நானும், என் அப்பாவும் வாதி பெயரிலும், 2ம் பிரதிவாதி பெயரிலும் சொத்து வாங்கினோம் என்றால் ஒரு நிலத்தை கொடுத்து இன்னொரு நிலத்தை மாற்றிக் கொண்டோம். கனகமணி அம்மாள் பெயரில் உள்ள நிலத்தை யார் பெயரில் மாற்றினோம் என்றால் என் பெயருக்கு என் தந்தை மாற்றினார். அந்த பத்திரத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால், அது பற்றி எனக்கு சரியாக தெரியவில்லை. பரிவர்த்தனை பத்திரம் வாதி பெயரிலும், 2ம் பிரதிவாதி பெயரிலும் தான் உள்ளது என்றால் சரியல்ல. அந்த பரிவர்த்தனை பத்திரத்தில் அடங்கிய சொத்துக்கள் ஆதியில் எவ்வாறு வாங்கப்பட்டன என்றால் என் அப்பா வாங்கினார். என் அப்பா கூட்டுக்குடும்ப வருமானத்தை வைத்து வாங்கினார் என்றால் பரிவர்த்தனை பத்திரத்தில் கண்ட ஒரு சொத்து நாங்கள் கூட்டுக்குடும்பமாக இருக்கும் போது வாங்கியது. பி.வா.சா.ஆ-4ல் கண்ட சொத்துக்கள் கூட்டுக்குடும்ப வருமானத்தில் தான் வாங்கப்பட்டன என்றால் இல்லை, எனது தனி வருமானத்தில் வாங்கினேன். எனக்கு 3 குழந்தைகள்

O.S.No. 178/2016
13.02.2020.
பி.வா.சா.2.திரு.அய்யாவு, த.பெ.அழகப்பன்
வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

இருந்ததால் எனது வருமானம் குடும்பத்தை நடத்த மட்டுமே போதுமானதாக இருந்தது என்றாலும் என்னால் சொத்து வாங்கும் அளவுக்கு வருமானம் இல்லை என்றாலும் சரியல்ல. பி.வா.சா.ஆ 4 ல் உள்ள சொத்துக்கள் பட்டா எண் 19 ல் உள்ளது என்றால் சரிதான். பட்டா எண் 19 என் பெயரிலும் பிரதிவாதிகள் பெயரிலும் கூட்டுப்பட்டா என்றால் சரிதான், நாகரத்தினம், மந்தக்காளை மற்றும் கோபால் ஆகிய மூவரும் எனது பத்திரத்தை வைத்து அவர்கள் வாங்கிக்கொண்டார்கள். பி.வா.சா.ஆ 4 பத்திரத்தில் கோபால் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார் என்றால் சரிதான். எனக்கும், என் தங்கைக்கும் எப்போது பிரச்சினை ஏற்பட்டது என்றால் 15, 20 வருடங்களுக்கு முன்னர் ஏற்பட்டது. பி.வா.சா.ஆ-6 ஆவணம் எழுதப்பட்ட போது என் அப்பா உயிருடன் தான் இருந்தார் என்றால் இருந்திருக்கலாம் எனக்கு தெரியாது. 1984-ல் தாவா சொத்தை நான் ஒத்திக்கு வாங்கி பின்னர் 1985 ல் கிரயம் வாங்கினேன் என்றால் வருடம் ஞாபகமில்லை, முதலில் தாவா சொத்தை உழவடைக்கு வாங்கி பின்னர் சுமார் ஒரு வருடம் சென்ற பிறகு அதே சொத்தை கிரயம் வாங்கினேன். தாவா சொத்தை வாங்கியது குறித்து நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியாகத் தெரியவில்லை. 1985 ல் சுப்பையா கோனாரிடம் ஒரு சொத்து வாங்கினேன் என்றால் 17 செண்ட் சொத்து வாங்கினேன். அந்த சொத்தும், கூட்டுக்குடும்ப வருமானத்தில் தான் வாங்கப்பட்டது என்றாலும், என் தனிப்பட்ட வருமானத்தில் வாங்கவில்லை என்றால் சரியல்ல, என் தனிப்பட்ட வருமானத்தில் தான் வாங்கினேன். ஒவ்வொரு வயலுக்கும் எங்கள் கிராம வழக்கப்படி ஒரு பெயர் உண்டு என்றால் சரிதான். பறையன்குளம் நிலம் நான் வாங்கினேன் என்றால் சரிதான். 1991 ல் நான் வாங்கிய சொத்துக்கு பெயர் சுடுகாட்டுசெய் என்றால் சரிதான். 1988 ல் ஆமீனாஹாத்தானுவிடம் வாங்கிய எனது பெயரிலும், எனது தம்பி பெயரிலும் சொத்து வாங்கப்பட்டது என்றால் சரிதான். நான் தனியாக சென்ற பிறகு எவ்வாறு என் தம்பியுடன் சேர்ந்து வாங்கினேன் என்றால் ஆமீனாஹாத்தானு அவர்கள் என்னையும், என் தம்பியையும் மேற்படி சொத்தை வாங்கச் சொன்னதால் வாங்கினேன். அவ்வாறு அவர் சொல்லவில்லை என்றாலும், கூட்டுக்குடும்ப சொத்தில் அது வாங்கப்பட்டது என்றாலும் சரியல்ல. 1991 ல் என் தம்பி தனக்கு திருமணம் செய்ய வேண்டும் என்று சொன்னார் என்றால் சரிதான். நான் அவ்வாறு செய்து வைக்கவில்லை என்றால் சரிதான். 1991 ல் என் பெயரில் பத்திரம் பி.வா.சா.ஆ 4 பதியும் போது, என் தம்பியும், என் அக்காவும் என்னிடம் அது பற்றி கேட்டார்கள் என்றால் சரியல்ல. அவ்வாறு கேட்டார்கள் என்றாலும் நான் அதற்கு என்தம்பிக்கு நான் சொத்து கொடுக்காமல் இருக்கப்போகிறேன் என்று கூறி என் தம்பியையும் 2 ம் பிரதிவாதியையும் சமாதானம் செய்தேன் என்றால் சரியல்ல. உறவினர்கள் கேட்ட போது என் தம்பிக்கு எனக்கு சொத்து கொடுக்கத்தெரியும் என்று கூறி அவர்களிடம் சண்டை போட்டேன் என்றால் சரியல்ல. 31.07.1991 ல் நானும் என் குடும்பத்தினரும் வாய்க்கரலாக சொத்தை பாகம் பிரித்து கொண்டோம் என்றால் சரியல்ல. அவ்வாறு வாய்க்கரலாக பாகம் பிரிக்கப்பட்டது என்றாலும் அதனை பஞ்சாயத்தார் முன்னிலையில் வெள்ளைத்தாளில் பதியப்படாமல் எழுதி

O.S.No. 178/2016
13.02.2020.

பி.வா.சா.2.திரு.அய்யாவு, த.பெ.அழகப்பன்
வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

கையெழுத்து செய்தோம் என்றாலும் சரியல்ல. அந்த ஆவணம் தான் வா.சா.ஆ 3 என்றால் சரியல்ல, வா.சா.ஆ 3 ஆவணத்தில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையதா என்றால் இல்லை. அந்த கையெழுத்து என்னுடையது தான் என்றால் சரியல்ல. வா.சா.ஆ 3ன் படி எனக்கு 3 ஏக்கர் 99 செண்ட் ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ 3ன் படி வாதிக்கு 3 ஏக்கர் 90 செண்ட் கொடுத்தது என்றால் சரியல்ல. என் சொத்தும், என் அப்பா சொத்தும் சேர்ந்து 8 ஏக்கர் இருக்குமா என்றால் 10 ஏக்கருக்கு மேல் இருக்கும். வா.சா.ஆ 3 ஆவணத்தின் படி சொத்துக்களை நானும் வாதியும் சமமாக பிரித்துக்கொண்டோம் என்றால் சரியல்ல. என் தங்கை 2ம் பிரதிவாதிக்கு வாய்க்கரால் பாகத்தின் படி 87 செண்ட் ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்ட சொத்து புல எண் 111/13ல் 57 செண்ட் உள்ளது என்றால் சரியல்ல. அந்த சொத்தை 2ம் பிரதிவாதி தான் அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ 1 ஆவணத்தின் படி 2ம் பிரதிவாதி அவருக்கு ஒதுக்கப்பட்ட 87 செண்ட்டை பொறுத்து சிறுகுறு விவசாயிகள் அடையாள அட்டை பெற்று அதனை விவசாயம் செய்து வந்தார் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ 2ன் படி 2ம் பிரதிவாதி அந்த 87 செண்ட் இடத்திற்கு வரிவகை செலுத்தி வருகிறார் என்றால் சரியாகத் தெரியவில்லை, எனக்கு தெரியாமல் கட்டியிருக்கலாம், ஆனால் என்னிடம் வரி கட்டிய ரசீது இருக்கிறது. புல.எண் 111/13ல் உள்ள சொத்து வாதி பெயரிலும் 2ம் பிரதிவாதி பெயரிலும் கனகமணி அம்மாளிடம் இருந்து நானும், என் அப்பாவும் பரிவர்த்தனை பத்திரம் ஏற்படுத்தினோம் என்றால் அந்த சொத்தை என் அப்பா என் பெயரில் வாங்கினார், வாதியும் 2ம் பிரதிவாதியும் அதில் இளவர்களாக காட்டப்பட்டுள்ளார்கள். அந்த சொத்து பி.வா.சா.ஆ 3ன் படி அழகப்ப கோனார் மற்றும் நான் ஆகியோர் வாதி மற்றும் 2ம்பிரதிவாதி பெயரில் வாங்கினோம் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ 3 ஆவணம் வாதி மற்றும் 2ம் பிரதிவாதி பெயரில் சொத்து வாங்ககுவதற்காக ஏற்படுத்தப்பட்டது என்றாலும் அவர்களை மோசடி செய்யவேண்டும் என்பதால் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ 4,6,7 ஆகிய ஆவணங்களில் கண்ட சொத்துக்களை மோசடி செய்யவேண்டும் என்று நான் நினைக்கிறேன் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி பெயரில் உள்ள சொத்தை மோசடி செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் என் பெயரில் இருப்பதாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் நிருபண வாக்குமூலத்தில் வாய்மூலமாக குடும்ப ஏற்பாடு செய்யப்பட்டதாக கூறினேன். அந்த குடுமப ஏற்பாடு எப்போது நடைபெற்றது என்றால் என் அப்பா இறந்து 6,7 மாதங்களில் நடந்தது, தேதி சரியாக ஞாபகமில்லை. குடும்ப ஏற்பாடு எதுவும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. என் அப்பா நிறைய பேரிடம் கடன் கொடுத்திருந்தார் என்றால் கொடுத்திருக்கலாம், எனக்கு தெரியாது. என் அப்பா ரூபாய் 65000 கடன் வாங்கவில்லை என்றால் சரியல்ல. என் அப்பா இறந்த பிறகு என் பெயரில் வாங்கப்பட்ட அனைத்து சொத்துக்களும் கூட்டுக்குடும்ப வருமானத்திலும், என் அப்பா வளர்த்த ஆடு, மாடுகள் மூலம் கிடைத்த வருமானத்திலும் வாங்கப்பட்டவை என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதியை மோசம் செய்யய .

O.S.No. 178/2016
13.02.2020.

பி.வா.சா.2.திரு.அய்யாவு, த.பெ.அழகப்பன்
வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

வேண்டும் என்ற எண்ணத்தில் தான் அவருக்கு ஒதுக்கப்பட்ட சொத்தை என் அப்பா வாங்கிய கடனுக்காக ஒதுக்கப்பட்ட சொத்து என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதியின் கணவர் கோபால் என்னிடம் மோசடியான ஆவணங்களை பறித்து சென்று விட்டது எந்த தேதியில் என்றால் இருபது வருடங்களுக்கு முன்னர் தேதி சரியாகத் தெரியவில்லை. நான் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவகத்தில் கொடுத்த பி.வா.சா ஆ 18ன் பேரில் உண்மை தன்மை இல்லை என்று முடிவு செய்தார்கள் என்றால் மோசடியாக அவ்வாறு சொல்லி விட்டார்கள். நான் அ.வ.எண் 442/2013 வழக்கிற்காக போலியாக உருவாக்கிய ஆவணங்கள் தான் பி.வா.சா.ஆ 18 மற்றும் 19 என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ 20 ஆவணம் எனக்கு எப்படி கிடைத்தது என்றால் எப்படி வாங்கினார்கள் என்று எனக்கு சரியாகத் தெரியவில்லை, என் மாமா மகேந்திரன் வாங்கினாரா என்று தெரியவில்லை. 2ம் பிரதிவாதியான எனது தங்கை ஒத்தக்கடை காவல் நிலையத்திலும் எந்த வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றால் சரியாகத் தெரியவில்லை. வாதியும், பிரதிவாதியும் எந்த வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றாலும் பி.வா.சா.ஆ 20 ஆவணம் புனையப்பட்டது என்றாலும் சரியல்ல. பி.வா.சா.ஆ 13 ஆவணம் 18ம் எண் பட்டாவிற்குரிய அடங்கல் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ 14 நான் வாங்கிய சொத்துக்குரிய அடங்கல் என்றால் சரிதான். பட்டா எண் 19 கூட்டுப்பட்டா என்றால், மந்தக்காளை மற்றும் 2ம் பிரதிவாதி பெயரில் கூட்டுப்பட்டா இருந்தது, நான் மனு கொடுத்து அவர்கள் பெயர் நீக்கம் செய்யப்பட்டுள்ளது. பட்டா எண் 19 தற்போது வரை கூட்டுப்பட்டாவாக தான் உள்ளது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ 14 ஆவணத்தில் தாசில்தார் உத்தரவு எதுவும் இல்லை என்றால் எனக்கு விவரம் தெரியவில்லை. பி.வா.சா.ஆ 14 புனையப்பட்டது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ 15-லும் தாசில்தார் கையெழுத்து இல்லை என்றால் விவரம் தெரியவில்லை. பி.வா.சா.ஆ 16 என் பெயரில் உள்ள சொத்து என்பதால் அது தாசில்தார் முத்திரை உள்ளது என்றால் வாங்கியுள்ளேன், ஆனால் மற்ற விவரம் தெரியவில்லை. பி.வா.சா.ஆ 17 பொய் புகார் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ 19 புனையப்பட்டது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ 21 பொய்யான ஆவணம் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ 22 ஆவணம் வாதி குடும்ப ஏற்பாட்டின் படி ஒதுக்கப்பட்ட சொத்தை சட்டப்படி பாகம் பிரிக்கவேண்டும் என்று சொல்லி வழக்கு தாக்கல் செய்தார் என்றால் அவ்வாறு தான் தாக்கல் செய்தார். நான், வாதி, பிரதிவாதி, 2ம் பிரதிவாதி, வாதியின் மகன்கள் பெயரில் அ.வ.எண் 447/13 வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் ஞாபகமில்லை. என் தங்கை பாகப்பிரிவினை கோரி என் மீது வழக்கு போட்டார் என்றால் சரியல்ல. என் மீதும் வாதி பெயரிலும் கு.வி.மு.ச 145 பிரிவின் படி வழக்கு தாக்கல் செய்யப்பட்டு ஆர்.டி.ஓ விசாணைக்கு அனுப்பப்பட்டது என்றால் சரிதான். ஆர்.டி.ஓ விசாணையில் நாங்கள் இருவரும் சமாதானமாக போவதாக கூறி வழக்கை முடித்துககொண்டோம் என்றால் சரியல்ல. ஆர்.டி.ஓ விசாரணையில் என்ன சொன்னார்கள் என்றால் நீதிமன்றத்தில் பரிகாரம் கோர வேண்டி சொன்னார்கள் அவ்வாறு சொல்லவில்லை என்றால் சரியல்ல. ஒத்தக்கடை கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில்

O.S.No. 178/2016
13.02.2020.

பி.வா.சா.2.திரு.அய்யாவு, த.பெ.அழகப்பன்
வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

சமாதான பேச்சு வார்த்தை நடந்தது என்றால் சரியல்ல. அவ்வாறு பேச்சுவார்த்தை நடந்தது என்றாலும், பதிவுசெய்யப்படாத ஆவணம் எழுதப்பட்டு நான், என் மகன், வாதி மற்றும் வாதி மகன்கள், 2ம் பிரதிவாதி ஆகியோர் கையெழுத்து போட்டோம் என்றால் சரியல்ல. அப்போது நான் தாக்கல் செய்த வழக்கையும், வாதி தாக்கல் செய்த வழக்கையும், 2ம் பிரதிவாதி தாக்கல் செய்த வழக்கையும் வாபஸ் செய்யப்பட்டது என்று முடிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அதன் அடிப்படையில் தான் வாதி தாக்கல் செய்த 411/2013 வழக்கை வாபஸ் செய்தார் என்றால் சரியல்ல. 2ம்பிரதிவாதியும் அவர் தாக்கல் செய்த வழக்கை வாபஸ் செய்தார் என்றால் சரியல்ல. நான் அந்த ஒப்பந்தத்தின் படி 447/13 வழக்கை வாபஸ் பெறவில்லை என்றால் ஒப்பந்தம் எதுவும் ஏற்படவில்லை. பி.வா.சா.ஆ.27 முதல் பி.வா.சா.ஆ.29 ஆகிய ஆவணங்களின்படி நானும் என் வழக்கறிஞரும் சேர்ந்துதான் அசல் வழக்கு எண்.411-2013 வழக்கை வாபஸ் பெற்றதாக உள்ளது என்றால் சரியல்ல. எனவே என்னுடைய பி.வா.சா.ஆ.4, 6, 7 ஆகிய மூன்று சொத்துக்களும் கூட்டுக்குடும்ப வருமானத்தில் வாங்கப்பட்ட சொத்துக்கள் என்றாலும், அந்த சொத்துக்களை வாங்க எனக்கு தனிப்பட்ட வருமானம் கிடையாது என்றாலும், இந்த சொத்துக்கள் அனைத்தும் 31.07.1991ம் தேதியிட்ட வா.சா.ஆ.3ன்படியான பாகப்பிரிவினையின்படி, பி.வா.சா.ஆ.4ல் கண்ட 1 முதல் 4 சொத்துக்கள் வாதியின் பாகமாகவும், 5வது சொத்து 1 ஏக்கர் 18 செண்டு என் பாகமாக ஒரே இடத்திலும் ஒதுக்கப்பட்டது என்றாலும் சரியல்ல. வாதியும், நானும் சமமாக பிரித்துக் கொண்டோம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6ன்படியான சொத்து வாதிக்கு ஒதுக்கப்பட்டு அவர் அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. எனக்கும், வாதிக்கும் பாகப்பிரிவினை நடைபெற்ற பின்னர், வாதியும் அவருக்குரிய சொத்துக்கு 1991 முதல் தனியாக வரி செலுத்தி வருகிறார் என்றால் சரியல்ல. சொத்துக்கள் பிரிக்கப்பட்ட பின்னர், வாதியானவர் தனிப்பட்டா கேட்டு, 1991ல் வட்டாட்சியருக்கு வாதி கொடுத்த மனு வா.சா.ஆ.10 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணம் என் அக்கா பெயரில் உள்ள பட்டாவானது, என் பெயரிலும், வாதி பெயரிலும் ஏற்பட்ட கூட்டுப்பட்டா என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணம் நானும், என் தம்பியும் சேர்ந்து 1988ல் கூட்டாக வாங்கிய கிரைய ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணம் எங்களுக்குள் ஏற்பட்ட பாகத்தின்படியான ஆவணம் என்றால் சரியல்ல. வாதியானவர் அவரது பாகத்திற்கு தனியாக செலுத்திய 23 ரசீதுகளை வா.சா.ஆ.6 ஆக தாக்கல் செய்துள்ளார் என்றால்

O.S.No. 178/2016
13.02.2020.

பி.வா.சா.2.திரு.அய்யாவு, த.பெ.அழகப்பன்
வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

சரியல்ல. வாதிக்கும், என் பெயருக்கும் ஏற்பட்ட கூட்டுப்பட்டா பாஸ் புத்தகம் வா.சா.ஆ.7 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.8 ஆவணம் பாகப்பிரிவினை ஏற்பட்ட பின்னர், வாதியானவர் மாங்குளம் கூட்டுறவு வங்கியில் கடன் வாங்கி, அதனை தீர்த்ததற்கான ஆவணம் என்றால் இருக்கலாம். வா.சா.ஆ.9 ஆவணத்தின்படி 1980ம் வருடம் என் அப்பா, வாதியின் பெயரில் தனியாக ஒரு சொத்து வாங்கியுள்ளார் என்றால் சரிதான். எனவே 31.07.1991ல் பாகம் ஏற்பட்டு, தாவா 1வது இலக்கச் சொத்துக்கள் வாதியின் பாகமாக ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 2வது இலக்கச் சொத்து என் பாகமாக ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 3வது இலக்கச் சொத்து 2ம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்டு, அவர் தனியாக அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. நான் வாதிக்கு அடிக்கடி தொந்தரவு கொடுத்து வந்து, வாதியை இடையூறு செய்து வந்ததால், வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றாலும், எனவே வாதி கோரியுள்ள பரிகாரங்கள் கிடைக்கத்தக்கது என்றாலும் சரியல்ல. ( 2ம் பிரதிவாதி தரப்பில் வாதி தரப்பு குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.)

மறுவிசாரணை இல்லை.